## தென் மாகாண சபை - 2012

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களினால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தென் மாகாண சபை நிதியக் கணக்குகளின் நிதிசார் நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றலையும் காசுப் பாய்ச்சலையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 மாகாண சபை நிதியம்

மீளாய்வாண்டிற்கான மாகாண சபை நிதியக் கணக்கு 2013 மார்ச் 25 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மாகாண சபையின் திரட்டிய நிதியம் ரூபா 373,144,340 ஆகக் காணபட்டதுடன் அது 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 370,476,392 ஆகும். 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2012 ஆம் ஆண்டில் மாகாண சபை நிதியம் அதிகரித்திருந்த போதிலும், 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலமைக்கூற்றின் படி ரூபா 104,099,540 ஆன சொத்துக்களை விஞ்சிய பொறுப்புக்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

### 1.2.2 ஏனைய கணக்குகள்

மீளாய்வாண்டிற்கான 2013 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மாகாண சபையின் ஏனைய கணக்குகளைச் சமர்ப்பித்தலின் செயல்முன்னேற்றம் கீழே தரப்பபடுகின்றது.

| | | கணக்குகளின் மொத்த எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்பட்ட கணக்குளின் எண்ணிக்கை | சமர்ப்பிக்கப் படாத கணக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | ஒதுக்கீட்டுக் கணக்குகள் | 26 | 26 | - |
| (ஆ) | வருமானக் கணக்குகள் | 01 | 01 | - |
| (இ) | மாகாண சபை உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்குகள் | 92 | 84 | 08 |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | வர்த்தக முற்பணக் கணக்குகள் | 12 | 08 | 04 |
| (உ) | நிதியக் கணக்குகள் | 05 | 05 | - |
| (ஊ) | நியதிச் சட்டக் கணக்குகள் | 05 | 02 | 03 |
| (எ) | சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்று | 01 | 01 | - |
| | | ----- | ----- | ----- |
| | மொத்தம் | 142 | 127 | 15 |
| | | === | === | === |

## 1.2.3 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

08 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதியக் கணக்குகளின் பிரகாரம் மீதிகள் ரூபா 352,359,085 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் மாகாண சபை நிதியக் கணக்கின் படி அம் மீதிகள் ரூபா 373,153,655 கூட்டுமொத்தமாக இருந்தமையால் ரூபா 20,794,570 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

## 1.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிச் செயலாற்றல் கூற்றில் பாதீட்டுப் பற்றாக்குறைக்கான நிதியீட்டத்தின் கீழ் மத்திய அரசாங்கத்திடமிருந்து கிடைத்த மூலதன ஏற்பாடு ரூபா 1,084,830,000 எனக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், 314 ஆம் இலக்க தலைப்பிற்குரிய தென் மாகாண சபையின் ஒதுக்கீட்டுக் கணக்கின் படி அது ரூபா 1,105,310,000 ஆக இருந்தது. அதன்படி, ரூபா 20,480,000 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிதிச் செயலாற்றல் கூற்றில் பாதீட்டுப் பற்றாக்குறைக்கான நிதியீட்டத்தின் கீழ் ஏனைய நிதியங்கள் மற்றும் பெறுவனவுகள் என ரூபா 55,301,598 காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், கணக்குடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த குறிப்பின் படி அது ரூபா 50,700,297 ஆக இருந்தது. அதன்படி, ரூபா 4,601,301 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(இ) நிதிச் செயலாற்றல் கூற்றில் பாதீட்டுப் பற்றாக்குறைக்கான நிதியீட்டத்தின் கீழ் பொது வைப்புக் கணக்கு மற்றும் தேறிய பொறுப்புக்களின் வேறுபாடுகள் என ரூபா 334,935,533 காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், கணக்கிற்கான குறிப்பு இல. 14 இன் படி அது ரூபா 399,176,018 எனக் காண்பிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 64,240,485 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஈ) காசுப் பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த காசு மீதிக்கும் நிதிச் செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த காசு மீதிக்குமிடையே பின்வருமாறு வேறுபாடுகள் காணப்பட்டன.

| | காசுப் பாய்ச்சல் கூற்றின் படி காசு மீதி | நிதிச் செயலாற்றல் கூற்றின் படி காசு மீதி | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| 2012 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 151,559,813 | 104,721,978 | 46,837,835 |
| 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 298,214,362 | 241,712,055 | 56,502,307 |

(உ) தென் மாகாண ருஹுனு சுற்றுலா பணியகத்தின் நிதிக்கூற்றுக்களின் படி பல்லின வைப்புக்கள் கணக்கின் மீதி ரூபா 1,854,816 ஆக இருந்ததுடன் பல்லின வைப்புக்கள் பதிவேட்டின் படி அம்மீதி ரூபா 1,627,618 ஆக காணப்பட்டமையால் ரூபா 227,199 வேறுபாடு காணப்பட்டது.

### 1.2.5 செலுத்தவேண்டிய மற்றும் பெறவேண்டிய கணக்குகள்

01 ஆண்டு காலத்தினை மிகைத்திருந்த செலுத்தவேண்டிய மற்றும் பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதிகள் முறையே ரூபா 40,555,059 மற்றும் ரூபா 967,394 ஆக இருந்தன.

### 1.2.6 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

#### (அ) பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 203 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் அக் கணக்காய்வு ஐயவினாக்களின் கணிப்பிடக்கூடிய பெறுமதி ரூபா 431,883,448 ஆக இருந்தது.

#### (ஆ) தகவல்களை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமை

07 நிறுவனங்களிற்குரிய ரூபா 531,430,096 கூட்டுமொத்தமான கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றிற்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1942 இன் 18 ஆம் இலக்க அரசாங்க சேவைகள் சேமலாப நிதிய அதிகாரச்சட்டம் | 4 பாடசாலைகள் மற்றும் ஆசிரியர் நிலையமொன்றில் சேவையில் ஈடுபட்டுள்ள ஓய்வூதியத்திற்கு உரித்தற்ற 05 ஊழியர்களிடமிருந்து அரசாங்க சேவைகள் சேமலாபத் தொகைகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | |
| (i) XXIV ஆம் அத்தியாயத்தின் 4.1, 4.3 மற்றும் 4.4 ஆம் பிரிவுகள் | 2010 ஆம் ஆண்டினுள் ஓய்வுபெற்ற உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 148,120 கடன் மீதி மற்றும் 2009 நவம்பர் 30 ஆந் திகதி சேவை வறிதாக்கப்பட்ட உத்தியோகத்தரின் ரூபா 114,600 கடன் மீதி என்பன 2013 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ii) XXIV ஆம் அத்தியாயத்தின் 13.6 ஆம் பிரிவு | 12 மாதங்களில் ஒரு தடவை மாத்திரமே விழா முற்பணம் செலுத்தப்பட முடியுமான போதிலும், அவ்வாறு 12 மாதகாலம் செல்லுமுன்னரே பிரதிப் பிரதான செயலாளர் (திட்டமிடல்) அலுவலகத்தில் சேவையாற்றிய 33 உத்தியோகத்தர்களிற்காக மீண்டும் ரூபா 165,000 விழா முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) 2000 மார்ச் 02 ஆந் திகதிய 07/2000 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட தாபன விதிக்கோவையின் 7(5) ஆம் உப பிரிவு மற்றும் 1994 பெப்ரவரி 11 ஆந் திகதிய 11/94 ஆம் இலக்க 2000 மார்ச் 02 ஆந் திகதிய 07/2000 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களிற்கு முரணாக பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் மீது 2007 யூன் 15 ஆந் திகதி முதல் தென் மாகாண வீதி அபிவிருத்தி சபை பதவியணியினரின் பதவியுயர்வுகளிற்குரிய சம்பள திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ஈ) 2006 செப்தம்பர் 22 ஆந் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை மற்றும் 2006 திசெம்பர் 26 ஆந் திகதிய DMS/B/01/03/01/SA ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதம் | (i) 2006 சனவரி 01 ஆந் திகதியில் சம்பள திருத்தத்தினை மேற்கொள்கையில் 2005 திசெம்பர் 31 ஆந் திகதி பெற்றுவந்த சம்பளத்திற்குப் பதிலாக 2006 சனவரி 01 ஆந் திகதி பெற்றிருந்த சம்பளத்தினைக் கருத்திற்கொண்டு சம்பள திருத்தம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. (2006 சனவரி 01 ஆந் திகதிய சம்பளம் 2005 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சம்பளத்திலும் கூடுதலாக காணப்பட்டமை) 2006 சனவரி 01 இல் உள்ளபடியான சம்பளத்தினுள் 2001 திசெம்பர் 28 ஆந் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அதிகரிப்பதற்கு உத்திதேசிக் கப்பட்ட சம்பள அதிகரிப்பில் 50 சதவீதம் அல்லது ரூபா 750 தொகை உள்ளடங்கியிருந்தமையால் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சகல உத்தியோகத்தர்களிற்கும் 2006 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட சம்பளங்கள் குறைபாடு கொண்டவையாகும்.<br><br>(ii) 2006 சனவரி 01 ஆந் திகதியின் பின்னர் சேர்த்துக்கொள்ளப்படுகின்ற உத்தியோகத்தர்களின் சம்பளம் ஆரம்ப மட்டத்தில் வைக்கப்படுதல் வேண்டுமெனக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு முரணாக அதிகாரசபைக்கு 2006 சனவரி 01 ஆந் திகதியின் பின்னர் சேர்த்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களின் சம்பளம் ஆரம்ப மட்டத்தினைக் காட்டிலும் மேல் மட்டத்தில் வைக்கப்பட்டிருந்தது. |
| (உ) 2009 யூன் 01 ஆந் திகதிய 30(i) ஆம் இலக்க மற்றும் 2009 செப்தெம்பர் 09 ஆந் திகதிய 30(ii) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைகள் | சுற்றறிக்கையின் கீழ் சம்பள திருத்தங்கள் தாபனவிதிக் கோவையின் 7 ஆம் அத்தியாயத்தின் (4) ஆம் உப பிரிவின் படி மேற்கொள்ளப்படுதல் வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதற்கு முரணாக படிமுறை படிமுறையாக வைத்தல் |

| | |
|---|---|
| | அடிப்படையில் சம்பள திருத்தங்களை மேற்கொண்டிருந்தது. |
| (ஊ) 2011 செப்தெம்பர் 13 ஆந் திகதிய 43(1) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 30(i) மற்றும் 30(ii) ஆம் இலக்க சுற்றறிக்கைகளின் கீழ் சம்பள திருத்தங்களை பிழையாக மேற்கொண்டிருந் தமையால் இச்சுற்றறிக்கை ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்த முடியாதிருந்தது. |
| (எ) 2006 ஏப்ரல் 10 ஆந் திகதிய 28 ஆம் இலக்க, 2006 மே 26 ஆந் திகதிய 28(1) ஆம் இலக்க, 2006 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய 28(ii) ஆம் இலக்க, 2007 ஆகஸ்ட் 01 ஆந் திகதிய 36 ஆம் இலக்க மற்றும் 2007 ஒக்தோபர் 15 ஆந் திகதிய 36(1) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைகள் | சுற்றறிக்கைளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாகவும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முறையான அங்கீகாரமின்றியும் 2006 சனவரி 01 முதல் 2012 சனவரி வரை 60 ஊழியர்கள் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர். |
| (ஏ) 2009 மே 26 ஆந் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை மற்றும் 2006 திசெம்பர் 26 ஆந் திகதிய DMC/B/03/01/03/01/SA ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதம் | எவ்வித சம்பள அதிகரிப்பும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி மேற்கொள்ளப்படக் கூடாது எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதற்கு முரணாக மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் 2008 யூலை 01 ஆந் திகதி முதல் சகல பதவிநிலையற்ற ஊழியர்களிற்கும் 4 சம்பள ஏற்ற சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டிருந்தது. |

## 2. வருமான முகாமைத்துவம்

2007 முதல் 2012 ஆம் ஆண்டு வரையான 6 ஆண்டுகளுக்குரிய வரி வருமானம் மற்றும் வரியல்லா வருமானம் கீழுள்ளவாறாகும்.

| ஆண்டு | வரி வருமானம் | வரியல்லா வருமானம் |
|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 2007 | 1,428.78 | 714.51 |
| 2008 | 2,129.38 | 581.34 |
| 2009 | 2,105.00 | 508.86 |
| 2010 | 2,532.16 | 520.49 |
| 20111 | 3,704.70 | 569.92 |
| 2012 | 3,889.51 | 619.26 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மகாண சபைக்குரிய 08 பிரதேச செயலகங்களினால் சேகரிக்கப்படுகின்ற வருமானத்திற்குரிய நிலுவை வரியான ரூபா 26,109,826 கூட்டுத்தொகை மீளாய்வாண்டின் இறுதி வரை அறிவிடுவதற்கு தவறவிடப்பட்டிருந்தது.

(ஆ) மாகாண வருமானத் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை வருமான அறிக்கையின் படி 04 வரி வகைகள் தொடர்பில் நிலுவையாக காணப்பட்ட வருமானம் ரூபா 223,827,294 ஆக காணப்பட்டதுடன் அந்த நிலுவை வருமானங்களை அறிவிடுவதற்கு 2013 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை தவறவிடப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மாகாண சபை நிதியத்தில் ரூபா 477,243,879 தொகையான பற்றாக்குறை காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 133,301,763 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 343,942,116 வீழ்ச்சிக்கு செலவினம் ரூபா 217,922,000 இனால் அதிகரித்தும் அரசாங்க மானியம் ரூபா 360,160,000 இனால் குறைவடைந்தும் இருந்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

## 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

| விடயம் | 2012 | 2011 | நிதி விளைவுகளில் அதிகரிப்பு (குறைவு) | நிதி விளைவுகளில் அதிகரிப்பு (குறைவு) சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | % |
| வருமானம் | 4,508,779 | 4,274,630 | 234,149 | 5.48 |
| செலவினம் | (18,030,535) | (17,812,613) | (217,922) | 1.22 |
| பற்றாக்குறை | (13,521,756) | (13,537,983) | 16,227 | (0.12) |
| அரசாங்க மானியம் | 13,044,512 | 13,404,681 | (360,169) | (2.69) |
| அரசாங்க மானியத்தின் பின்னர் (பற்றாக்குறை) | (477,244) | (133,302) | (343,942) | 258.02 |

## 3.3 நிறுவனத்திற்கு எதிராக அல்லது நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டரீதியான நிகழ்வுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஊழியர் ஒருவரினால் ஒழுக்காற்றுப் பணிப்புரையினை சவாலுக்குட்படுத்தி நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்த வழக்கும், அதிகாரசபையின் ஊழியர்களினால் பதவியுயர்வு, பணிக்கொடையினைப் பெற்றுக்கொள்ளல், விசேட படிகள், ஊழியர் சேமலாப நிதி, சம்பளம் மற்றும் வழக்குக் கட்டணங்களைக் கோரி தொழில் அலுவலகத்தில் தொடரப்பட்டிருந்த 06 முறைப்பாடுகளும் விசாரிக்கப்பட்டு வரப்படுகின்றன.

(ஆ) மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையினை இழிவுபடுத்தியமை தொடர்பில் செய்திப்பத்திரிகை ஒன்றிற்கு எதிராகவும், போலியான ஆவணங்களை தயாரித்தமை தொடர்பில் நிறுவனமொன்றின் ஊழியரிற்கு எதிராகவும் அதிகாரசபையினால் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் அவை விசாரிக்கப்பட்டு வரப்படுகின்றன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### (அ) அரசாங்க மானியம்

மாகாண சபையின் அபிவிருத்தி வேலைகள் பிரேரணைகளிற்காக கிடைத்திருந்த மத்திய அரசாங்கத்தின் மானியங்கள் மற்றும் செலவழிப்புகள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | மொத்த தேறிய ஒதுக்கீடு | உள்ளபடியான செலவினம் | சேமிப்பு | |
|---|---|---|---|---|
| | ரூபா மில். | ரூபா மில். | ரூபா மில். | % |
| கருதுகோள் அடிப்படை மானியம் | 347.00 | 189.46 | 157.54 | 45.40 |
| மாகாண குறித்துரைத்த அபிவிருத்தி மானியம் | 1,642.00 | 776.99 | 865.01 | 52.68 |
| சுகாதாரத் துறை அபிவிருத்திச் செயற்திட்டம் - வெளிநாட்டுக் கடன் | 5.00 | 0 | 5.00 | 100.00 |
| கல்வித் துறை அபிவிருத்திச் செயற்திட்டம் - வெளிநாட்டுக் கடன் | 124.00 | 102.00 | 22.00 | 17.74 |
| யுனிசெப் நிகழ்ச்சித்திட்டம் | 2.00 | 0 | 2.00 | 100.00 |
| 1000 பாடசாலைகள் நிகழ்ச்சித்திட்டம் (அ) | 25.00 | 20.48 | 4.52 | 18.08 |
| தோட்டத் துறை பாடசாலைகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 20.00 | 16.38 | 3.62 | 18.10 |

#### (ஆ) தென் மாகாண கல்வித் திணைக்களம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் மீதான தெரிவுப் பரிசோதனையில் காலி, எல்பிடிய மற்றும் அம்லந்தோட்டை வலயங்களில் 20 பாடசாலைகளைச் சேர்ந்த புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய 2665 மாணவர்களில் 106 மாணவர்கள் மாத்திரமே சித்தயடைந்திருந்தனர். 1998 முதல் 2012 ஆம் ஆண்டு வரையான 14 ஆண்டு காலத்தினுள் ஹம்பாந்தோட்டை வலயத்திற்குரிய 98 பாடசாலைகளில் 27 பாடசாலைகளைச் சேர்ந்த 1468 மாணவர்கள்

புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றியிருந்த போதிலும், அதில் எந்தவொரு மாணவரும் பரீட்சையில் சித்தியடைந்திருக்கவில்லை.

(ii) க.பொ.த. (சா.த) பரீட்சைக்குரிய கணிதம், ஆங்கிலம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாட விடயங்களிற்குரிய பெபேறுகள் 2010 ஆம் ஆண்டைக் காட்டிலும் 2011 ஆம் ஆண்டில் முறையே 9.51 சதவீதத்தினாலும், 7.34 சதவீதத்தினாலும், 8.41 சதவீதத்தினாலும் குறைவடைந்திருந்தமை காலி, உடுகம மற்றும் எல்பிடிய வலயங்களிற்குரிய பெறுபேறுகளை ஒப்பிடுகையில் வெளிப்பட்டது.

(இ) தென் மாகாண துரித அபிவிருத்ததிச் செயற்திட்டத்தின் கீழ் 2012 ஆம் ஆண்டிற்காக மொரவக கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளிற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 3,367,000 தொகையில் ரூபா 869,215 மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. சேமிப்பு மொத்த ஏற்பாட்டில் 74 சதவீதமாகிய ரூபா 2,397,185 ஆக காணப்பட்டது. அதன் படி வலயத்திலுள்ள பாடசாலைகளின் பாடங்களின் தரத்தினை உயர்த்துவதற்காக துரித அபிவிருத்திச் செயற்திட்டத்தின் எதிர்பாக்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் செயலகத்திற்காக மின்சாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 3,875,500 செலவிடப்பட்டு 200KVA இயலளவுடைய மின் பிறப்பாக்கி இயந்திரமொன்று தாபிக்கப்பட்டு அதனைப் பேணுவதற்காக ஆண்டுதோரும் ரூபா 75,000 செலவிடப்பட்டிருந்தது. சபைக் கூடத்தில் குளிரூட்டல் முறைமையினை செயற்படுத்தும் நாட்களில் அந்த மின் பிறப்பாக்கி இயந்திரத்தை செயற்படுத்தாது சாதாரண மின்சாரம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அவ்வாறாக குளிரூட்டல் முறைமையினை செயற்படுத்தும் நாட்களில் அதற்காக பிறப்பாக்கி இயந்திரத்தை செயற்படுத்தியிருப்பின் நிறுவனத்தின் மாதாந்த மின்சாரப் பட்டியலில் ஏறத்தாழ ரூபா 75,000 தொகையை சேமிக்க முடிந்திருக்கும்.

(ஆ) சபைச் செயலகத்தின் மின்சாரப் பட்டியல்களில் இரவு 6.30 – 10.30 வரையான அதிக வேலைப்பழு கொண்ட நேரங்கள் மற்றும் இரவு 10.30 இலிருந்து அதிகாலை 5.30 வரையான வேலைப்பழு அற்ற நேரங்களிற்காக 2012 ஆம்

ஆண்டில் மாத்திரம் மாதத்திற்கு 300 இற்கும் 400 இற்கும் இடைப்பட்ட அலகு மின்சாரம் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், அக்காலத்தில் மின்சாரத்தினை சிக்கனமாகப் பயன்படுத்துதல் தொடர்பில் முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(இ) நெழுவ கிராமிய வைத்தியசாலைக்குச் சொந்தமான இரண்டு மாடிக் கட்டிடத்தை நெழுவ பிரதேச சபைக்குக் கையளித்தல் தொடர்பில் வழங்கப்பட்ட கணக்காய்வு ஐய வினாவின் படி நியமிக்கப்பட்டிருந்த குழுவின் அறிக்கையில் காலாவதியான மருந்துகளின் பெறுமதி ரூபா 542,094 எனக் காண்பிக்கப் பட்டிருந்ததுடன், அத்தொகையை பொறுப்புடைய உத்தியோகத்தர்களிடமிருந்து திணைக்களக் கட்டணத்துடன் 2013 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை அறிவிடப்பட்டிருக்கவில்லை. அத்துடன் 1995 சனவரி 27 முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலத்தில் மருந்துகளிற்குப் பொறுப்பாக இருந்த மூன்று வைத்தியர்களினால் இருப்புப் பதிவேடுகள் உரியபடி பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கடற்றொழில் அமைச்சினால் ரூபா 6.5 மில்லியன் செலவில் 213 கடற்றொழிலாளர்களிற்கு 213 G.P.S. உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அது தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) 2012 மே 17 ஆந் திகதிய கடிதத்தினால் 50 அலகுகள் GARMIN 128 GPS இனைக் கொள்வனவு செய்வதற்காக தெரிவுசெய்யப்பட்டிருந்த 05 நிறுவனங்களிடமிருந்து விலை மனுக்கள் கோரப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருந்தமை பதிவுக் கடிதங்கள் பதிவேட்டின் படி உறுதிப்படுத்தப்படவில்லை.

(ii) விலை மனுக்களைக் கோருகையில் அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 3.4 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 50 அலகுகள் GARMIN 128 GPS மற்றும் 50 அலகுகள் GARMIN 72 GPS ஆகியவற்றைக் கொள்வனவு செய்வதற்காக விலை மனுக்கள் கோரப்பட்டிருந்த போதிலும், கட்டளைக் கடிதத்தில் 115 அலகுகள் GARMIN 128 GPS மற்றும் 93 அலகுகள் GARMIN 72 GPS எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(iv) கொள்வனவுச் சபை தீர்மானத்தில் திகதி குறிப்பிடப்படாதிருந்ததுடன் அதில் கொள்வனவு செய்யப்பட வேண்டிய எண்ணிக்கையும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(v) கடற்றொழில் சங்கங்களுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பரிசோதனையில் உடன்படிக்கை அமுலாக்கப்படும் திகதி மற்றும் கையொப்பமிடப்பட்ட திகதி என்பவற்றிற்கிடையே வேறுபாடுகள் வெளிப்பட்டமை மற்றும் அதற்கமைய உடன்படிக்கையின் செல்லுபடியாகும் தன்மை தொடர்பில் சிக்கலான நிலமை காணப்படுகின்றமை மேலும் இரண்டு வகையான GPS உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், உடன்படிக்கையில் உரிய வகை குறித்துரைத்துக் காட்டப்பட்டிருக்கவில்லை.

(vi) கடற்றொழில் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட GPS உபகரணங்கள் குறித்த சங்கங்களில் பதிவுசெய்து கொள்ளப்பட்டிருந்த கடற்றொழில் அங்கத்தவர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டமைக்கான கபகிர்ந்தளித்தல் பதிவேடு கணக்காய்வுத் திகதி வரை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(vii) இந்த 213 உபகரணங்களும் நலனாளிகளிற்கு கிடைத்தமையை உறுதிப்படுத்துவதற்காக கடற்றொழிலாளர்களின் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம், கடற்றொழில் சங்கத்தின் பெயர், சங்க உறுப்பினர் இலக்கம், உபகரணங்களைப் பெற்றுக்கொண்ட திகதி மற்றும் கையொப்பங்கள் உள்ளடக்கப்பட்ட கோவை பேணிவரப்பட்டிருக்கவில்லை.

(உ) 2012 ஆம் ஆண்டின் மாகாண குறித்துரைக்கப்பட்ட அபிவிருத்தி மானியத்தின் கீழ் ரூபா 2 மில்லியன் செலவில் 43 கடற்றொழிலாளர்களிற்காக தோணிகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) விலை மனுக்களைக் கோருகையில் தெரிவுசெய்யப்பட்டிருந்த 05 நிறுவனங்களிற்கு கடிதங்கள் அனுப்பப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படவில்லை.

(ii) ஒரு கடற்றொழில் சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்த 13 தோணிகளிற்குரிய உடன்படிக்கையில் தோணிகளின் வகை, எண்ணிக்கை குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(iii) அந்த 43 தோணிகளையும் பெற்றுக்கொண்ட கடற்றொழிலாளர்களின் பெயர், முகவரி, கையொப்பங்கள் போன்ற முக்கியமான விபரங்கள் உள்ளடக்கப்பட்ட கோவை பேணிவரப்பட்டிருக்கவில்லை.

(ஊ) காலி வலயத்திற்குரிய 04 பாடசாலைகளின் 04 ஆசிரியர்களினால் 1990 முதல் 2011 ஆம் ஆண்டு வரையான காலத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த சம்பளமற்ற 1,339 நாட்கள் விடுமுறைக்காக ரூபா 332,096 தொகை 2012 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. அத்துடன் மகா வித்தியலயமொன்றில் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் 04 ஆசிரியர்களினால் 1990 முதல் 2011 ஆம் ஆண்டு வரையான காலத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த சம்பளமற்ற 31 நாட்கள் விடுமுறைக்காக அறவிடப்பட வேண்டிய தொகையினை அறவிடுவதற்கு 2012 திசெம்பர் வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) எல்பிடிய வலயத்திற்குரிய 13 பாடசாலைகளின் 14 ஆசிரியர்களினால் 1999 முதல் 2011 ஆம் ஆண்டு வரையான காலத்தில் 1,916 ½ நாட்கள் சம்பளமற்ற விடுமுறைகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் சம்பளமற்ற விடுமுறைகளிற்காக அறவிடப்பட வேண்டிய தொகை கழித்துக் கொள்ளப்படாது சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஏ) மாகாண கல்விப் பணிப்பாளரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது மாத்தறை வலயத்தின் ஆசிரியர் ஒருவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பினை மேற்கொண்டிருந்ததுடன் அதற்காக 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் சம்பளமற்ற 240 நாட்கள் விடுமுறை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஐ) மாத்தறை வலயத்தில் கனிஷ்ட வித்தியாலயமொன்றில் பணியாற்றிவருகின்ற ஆசிரியர் ஒருவர் தகுதிகாண் காலத்தினுள் அங்கீகாரமின்றி 119 நாட்கள் விடுமுறை பெற்றிருந்ததுடன் அவரது வினைத்திறனின்மை தொடர்பில் அவ்வப்போது அறிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாசிரியரின் மருத்துவ அறிக்கை தனிப்பட்ட கோவையில் காணப்படாதிருந்ததுடன் கோவையும் பூரணமற்றதாக காணப்பட்டது. அதன் படி அவர் தொடர்பில் தாபன விதிக்கோவையின் II ஆம்

அத்தியாயத்தின் II ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) 1994 முதல் பயிற்சிச் சான்றிதழ் இன்றி ஆசிரியர் நியமனம் பெற்று பாடசாலை ஒன்றில் நடனம் தொடர்பில் உப ஆசிரியராக பணியாற்றும் ஆசிரியை ஒருவர் 1999 முதல் 2012 ஆம் ஆண்டு வரையான (2007 ஆம் ஆண்டின் விடுமுறை அறிக்கை காணப்பட்டவில்லை) 14 ஆண்டுகளில் 958 ½ தினங்கள் சம்பளமற்ற விடுமுறையினைப் பெற்றிருந்தார். இதன் காரணமாக குறித்த ஆசிரியையின் பதவி வறிதாக்கல் கடிதத்தினை வழங்குமாறு மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், வலயக் கல்விப் பணிப்பாளரால் அந்த ஆசிரியை தொடர்பில் 2013 ஏப்ரல் வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) அம்பலங்கொட கல்வி வலயத்தில் 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2011 ஆம் ஆண்டில் கணிதப் பாடத்தில் சித்தியடைதல் சதவீதத்தின் குறைவு 02 சதவீதம் முதல் 66 சதவீதம் வரையான வீச்சில் பரம்பிக் காணப்பட்ட போதிலும், வலயத்தினுள் கணிதப் பாடத்தினைக் கற்பிக்கும் ஆசிரியர்களிற்கான வெற்றிடங்கள் எதுவும் காணப்படவில்லை. மேலும், 07 பாடசாலைகள் தொடர்பில் க.பொ.த (உ.த) கற்பதற்கான தகைமை பெற்றுக்கொண்ட சதவீதமும் 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2011 ஆம் ஆண்டில் 05 சதவீதம் முதல் 85 சதவீதம் வரையான வீச்சில் குறைவடைந்திருந்தது. எவ்வாறாயினும், இவ்வலயத்திலுள்ள பாடசாலைகளின் பலவீனமான மாணவர்களின் கணிதப் பாட அறிவினை அதிகரிப்பதற்கு விசேட கருத்தரங்குத் தொடரொன்றை நடாத்துவதற்காக ரூபா 57,500 செலவிடப்பட்டிருந்த போதிலும், அதன்மூலம் பயனுள்ள பெறுபேறு கிடைத்திருந்தமைக்கான சான்றுகள் காணப்படவில்லை.

(ஔ) மாகாண கல்வித் திணைக்களத்தினால் 2008, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் பெற்றுக்கொண்டிருந்த புகையிரத ஆணைச் சீட்டுக்களிற்காக ரூபா 26,089,938 மொத்தத் தொகையினை புகையிரதத் திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(க) காலி வலய அலுவலகத்திற்குரிய பாடசாலையொன்றின் ஆசிரியர் ஒருவர் மன நோய் காரணமாக 1990 முதல் 2010 ஒக்தோபர் 02 ஆந் திகதி ஓய்வுபெறும் வரை சம்பளமற்ற 2,453 நாட்கள் விடுமுறைகளைப் பெற்றுக் கொண்டிருந்த போதிலும், அதனைக் கருத்திற்கொள்ளாது சம்பளம் செலுத்தப்பட்டிருந்தமையால்

அவருக்கு ரூபா 967,449 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. அதில் ரூபா 276,875 இனை அவரது ஊழியர் பணிக்கொடையிலிருந்து கழித்ததன் பின்னர் மேலும் அவரிடமிருந்து அறவிடப்பட வேண்டியுள்ள ரூபா 690,574 தொகை 2012 நவம்பர் 30 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(கா) அகுரஸ்ஸ வலய அலுவலகத்திற்குரிய கனிஷ்ட வித்தியாலயமொன்றில் அதிபராக சேவையாற்றிய ஆசிரியை 2010 ஆகஸ்ட் 11 ஆந் திகதி முதல் 2013 ஒக்தோபர் 30 ஆந் திகதி வரை வலயக் கல்வி அலுவலகத்திற்கு இணைப்புச்செய்யப்பட்டு எவ்விதக் கடமைகளும் ஒப்படைக்கப்படாது சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

(கி) 2013 ஆம் ஆண்டிற்காக பாடசாலை மாணவர்களிற்கு பகிர்ந்தளிப்பதற்காக 94,850 சீருடைத் துணிப் பக்கட்டுக்கள் வலய அலுவலகத்திற்குக் கிடைத்திருந்ததுடன் பகிர்ந்தளித்தல் பதிவேட்டின் படி பகிர்ந்தளிக்கப்பட்ட எண்ணிக்கை 94,061 ஆகும். அதன் படி எஞ்சியிருக்க வேண்டிய பக்கட்டுக்களின் எண்ணிக்கை 789 ஆன போதிலும் 2013 யூன் 12 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் படி எஞ்சிய சீருடைப் பக்கட்டுக்களின் எண்ணிக்கை 2,828 ஆக இருந்தது.

(கீ) தென் மாகாணப் பாடசாலைப் பிள்ளைகளிற்கான 2007, 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளிற்குரிய மாணவர் உதவு தொகைகள் வலய அலுவலகத்திற்கு 2012 பெப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் அனுப்பி வைக்கப்பட்டிருந்ததுடன் 2010, 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளிற்குரிய தொகைகள் கணக்காய்வுத் திகதியான 2013 ஏப்ரல் வரை வலய அலுவலகங்களிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. புலமைப் பரிசில் நலன்களை வழங்குதல் இவ்வாறு தாமதிக்கப்படுதல் மாணவர்களின் கல்வி நடவடிக்கைளிற்கு தடையேற்படித்தியிருந்தது.

(கு) 2012 ஆம் ஆண்டின் சனவரி முதல் நவம்பர் வரை மாணவர் உதவுதொகைக்கு உரித்துடைய மாதங்களுக்கு ஹம்பாந்தோட்டை வலயத்திலுள்ள 11 பாடசாலைகளின் 60 உதவு தொகை பெறுகின்ற மாணவர்களிற்காக 2013 மார்ச் 21 ஆந் திகதி திஸ்ஸமஹாராம மக்கள் வங்கிக்கு எழுதப்பட்டிருந்த ரூபா 284,500 பெறுமதியான காசோலைகள் மதிப்பிழந்திருந்ததுடன் 2012 ஆம் ஆண்டிற்கு உரித்தான தொகைகள் கணக்காய்வுத் திகதியான 2013 யூன் 12 வரை குறித்த மாணவ உதவுதொகை பெறுனர்களிற்கு உரித்தாகியிருக்கவில்லை.

(கூ) நன்னடத்தை திணைக்களத்தின் தொழிற்பயிற்சிப் பாடநெறி மற்றும் மேலதிக வகுப்புக்களை நடத்துவதற்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கான செலவின விடயத்திற்கு ரூபா 1,650,000 நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 1,634,836 உசாத்துணையாளர்களிற்காக செலவிடப்பட்டிருந்தது. இருப்பினும், தொழிற்பசிப் பாடநெறிகளைக் கற்றுக்கொடுப்பதற்காக பாடத்திட்டமும் மாணவர்களின் தவணைப் பரீட்சை பெறுபேறுகளின் பதிவேடும் காணப்படாதிருந்ததுடன் இக்கற்பித்தல் வருடத்திற்கு ஏறத்தாழ 08 மாதங்கள் இடம்பெற்றிருந்தது.

(கெ) மொழி பெயர்த்தல் உபகரணங்களை ரூபா 1,337,441 இற்கு கொள்வனவு செய்வதற்காக நியமிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டுச் சபை சமர்ப்பித்திருந்த அறிக்கையின் படி உபகரணங்களை வழங்கி பொருத்திச் செயற்படுத்திக் காண்பித்த பின்னர் பணத்தைச் செலுத்துவதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்தது. அவ்வாறு உபகரணங்கள் பொருத்தப்பட்டு பரீட்சிக்கப்படாது ரூபா 1,000,000 செலுத்தப்பட்டிருந்தது. உபகரணங்கள் 2012 ஏப்ரல் 03 ஆந் திகதி நிறுவனத்திற்குக் கிடைத்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரை அவ் உபகரணங்கள் பொருத்தப்படாது களஞ்சியத்தில் வைத்திருக்கப்பட்டிருந்தது.

(கே) அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டத்திற்காக காணிகளைக் கையேற்றல் நடவடிக்கைகள் வினைத்திறனாக மேற்கொள்ளப்படாமையால் பின்வருமாறு மேலதிக இழப்பீட்டுத் தொகைகளை செலுத்த வேண்டியேற்பட்டிருந்தது.

(i) அரசாங்காத்தின் லால்பே குளத்திற்காக காணிகளை கையேற்கும் ஆரம்ப நடவடிக்கைகள் 2001 ஆம் ஆண்டில் இடம்பெற்றிருந்ததுடன், அச்சந்தர்ப்பத்தில் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 389,675 ஆக காணப்பட்டது. கையேற்பு தாமதமடைந்தமை காரணமாக அந்த ஆதனங்கள் 2011 மே 06 ஆந் திகதி மீண்டும் ரூபா 943,500 இற்கு மதிப்பிடப்பட்டு 2012 இல் அதற்காக ரூபா 553,825 மேலதிகத் தொகை இழப்பீடாக செலுத்தப்பட்டிருந்தது.

(ii) பெலியத்த தாய் மற்றும் சிறுவர் வைத்தியசாலையின் அபிவிருத்திக்காக 05ஏக்கர் 02 ரூட் 1.06 பேர்ச் இனைக் கையேற்பதற்காக 2007 யூன் 20 ஆந் திகதி ரூபா 28,000,000 இற்கு மதிப்பிடப்பட்டு 1979 திசெம்பர் 14 ஆந் திகதிய 67 ஆம் இலக்க வர்த்தமானிப் பத்திரிகையின் 38(அ) பிரகாரம் இடைக்கால அறிவித்தல் ஒக்தோபர் 03 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்டிருந்தது. கையேற்றல் வினைத்திறனாக மேற்கொள்ளப் படாமையால் 2011 பெப்ரவரி 03 ஆந் திகதிய மதிப்பீட்டின் படி

இழப்பீட்டினைச் செலுத்துவதற்காக ரூபா 46,645,000 ஏற்பாடு தேவைப்பட்டிருந்ததுடன் அதற்கும் மேலாக இடைக்கால அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து தாமத வட்டியினைச் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

(iii) கங்கொடகம கிராமிய வைத்தியசாலையில் வார்ட் ஒன்றை நிர்மாணிப்பதற்காக காணியினைச் சுவீகரிப்பதற்காக 38 (அ) பிரகாரமான இடைக்கால அறிவித்தல் 1979 திசெம்பர் 14 ஆந் திகதி பிரசுரிக்கப் பட்டிருக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 940,000 இழப்பீடு 2007 மே 30 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. இத்தாமதம் காரணமாக இடைக்கால அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து இழப்பீடு செலுத்தப்பட்ட திகதி வரை தாமத வட்டியாக ரூபா 1,843,120 செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

(கை) மதுவரி ஆணையாளர் நாயகத்தின் 2011 ஒக்தோபர் 12 ஆந் திகதிய EC/G/R/L/2011 ஆம் இலக்க கடிதத்தின் 3 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்த மதுவரி உத்தரவுப் பத்திரங்களை வழங்குகையிலும் புதுப்பிக்கையிலும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திடமிருந்தும் மாகாண இறைவரி ஆணையாளர் நாயகத்திடமிருந்தும் பெற்றுக்கொண்ட வரித் தீர்வைச் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும். அம்லந்தோட்டை பிரதேச செயலகம் 2012 ஆம் ஆண்டிற்காக வழங்கியிருந்த 5 உதத்தரவுப் பத்திரங்கள் மற்றும் சூர்யவெவ பிரதேச செயலகத்தினால் 2012 ஆம் ஆண்டிற்காக வழங்கப்பட்டிருந்த உதத்தரவுப் பத்திரமொன்றிற்காக மாகாண இறைவரி ஆணையாளர் நாயகத்திடமிருந்து வரித் தீர்வைச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(கொ) உணவு, கூட்டுறவு அமைச்சின் செயலாளரால் 1993 சனவரி 28 ஆந் திகதி பலபிடிய பிரதேச செயலகப் பிரிவிலுள்ள வதுரேகம இல் அமைந்துள்ள 4 ஏக்கர் 37.06 பேர்ச் காணி சம்பந்தமாக தனியார் கம்பனியொன்றுடன் வருடாந்தம் ரூபா 72,000 இற்கு குத்தகை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது. குறித்த கம்பனி 2000 ஆம் ஆண்டு முதல் குத்தகை செலுத்துவதனை ஏய்ப்புச்செய்து தொழில் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. 2006 ஆம் ஆண்டில் இது தொடர்பில் தொடரப்பட்டிருந்த வழக்குத் தீர்ப்பின் பிரகாரம் கம்பனியிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,501,131 தொகையினை அறவிட்டுக் கொள்வதற்கு 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை கைத்தொழில் பிரதிச் செயலகம் தவறியிருந்தது. கணக்காய்வுத் திகதியான 2013 செப்தெம்பர்

30 ஆந் திகதி வரை குறித்த ஆதனங்களும் கட்டிடங்களும் காடுகளால் சூழப்பட்டு பாதுகாப்பற்றதாக எவ்வித நடவடிக்கைக்கும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(கோ) கடல்சார் தொல்பொருள் சுற்றுலாச் செயற்திட்டம் என்ற பெயரில் பரீட்சார்த்த செயற்திட்டமொன்றை அமுலாக்குவதற்காக மத்திய கலாசார நிதியத்துடன் 2013 மார்ச் 20 ஆந் திகதி ருஹுனு சுற்றுலாப் பணியகம் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தது. இதற்காக தென் மாகாண அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 2011 ஆம் ஆண்டில் ரூபா 1,700,000 தொகையும், 2012 ஆம் ஆண்டில் ரூபா 3,500,000 தொகையும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் 2011 ஆம் ஆண்டில் ரூபா 1,672,836 செலவில் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் படகொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 3,130,305 செலுத்தப்பட்டிருந்தது. இச்செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்த முன்னர் சாத்தியக்கூற்று ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(கௌ) ஹம்பாந்தோட்டை மாகாண விவசாயப் பணிப்பாளரின் 2010 மார்ச் 17 ஆந் திகதிய கடிதத்தினால் அந்த அலுவலகத்தின் வாகனமொன்று தென் மாகாண விவசாய அமைச்சருக்கு 2010 மார்ச் 18 ஆந் திகதி விடுவிக்கப்பட்டிருந்தது. அது 2010 ஏப்ரல் 27 ஆந் திகதி மீளவும் கையளிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், இந்த வாகனம் 2010 ஏப்ரல் 09 ஆந் திகதி விபத்தில் சிக்கியிருந்ததுடன் தென் மாகாண நிதி ஒழுங்குவிதிகள் 54.1.2 இன் பிரகாரம் விபத்து தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. தென் மாகாண நிதி ஒழுங்குவிதிகள் 54.3.1 இன் பிரகாரம் ஆரம்ப விசாரணையும் உரிய நேரத்தில் இடம்பெற்றிருக்கவில்லை. விபத்து நிகழ்ந்த சந்தர்ப்பம் வரை வாகனத்திற்காக எவ்வித காப்புறுதிப் பாதுகாப்பும் பெற்றுக் கொள்ளப்படாதிருந்ததுடன் திருத்தத்திற்காக செலவிடப்பட்டிருந்த மொத்தச் செலவினம் ரூபா 168,500 இனை அறவிடுவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ங) தெலிச்சவில பண்ணையினுள் லேசர் பிரிவொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 798,200 நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக மாவட்டப் பொறியியலாளர் (நீர்ப்பாசனம்) மாத்தறை இனால் தயாரிக்கப்பட்டிருந்த ரூபா 775,000 மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

(i) அந்த மதிப்பீட்டினதும் உள்ளபடியான செலவினத்தினதும் பரிசோதனையில் 05 செலவின விடயங்களிற்காக ரூபா 88,930 மிகை மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது.

(ii) செலவின விடய இல. 13 இன் பிரகாரம் கோழிக் கூடுகளிற்கு வலை அடித்து அதனைச் சுற்றி இரு தடவைகள் வர்ணம் பூசி II ஆம் வகுப்பு மரப் பாதுகாப்பு போடப்படுதல் வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதற்குத் தேவையான வலைகளின் பண்புகள் மற்றும் வர்ணம் பூசுதுல் என்பன மதிப்பிடப்பட்டிருக்கவில்லை. தயாரிக்கப்பட்டிருந்த வலைகள் இத்துப் போகும் நிலையில் காணப்பட்டதுடன் அந்த வலைகள் பலமின்றிக் காணப்பட்டமையால் இன்னுமோர் வலையை இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஙா) தெலிச்சவில பண்ணையில் மாட்டுக் கொட்டிலை நிர்மாணிப்பதற்காக மாத்தறை மாவட்ட பொறியியலாளர் (நீர்ப்பாசனம்) அங்கீகரிக்கப்பட்டிருந்த ரூபா 437,000 பெறுமதியான மதிப்பீட்டின் படி தென் மாகாண விவசாயப் பணிப்பாளரால் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(i) இந்நிர்மாணம் தொடர்பில் கமத்தொழில் சங்கமொன்றுடன் 2011 யூலை 27 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் படி 02 மாத காலத்தினுள் வேலைகள் பூரணப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், திகதியிடப்படாத கடிதத்தினால் 2011 திசெம்பர் 31 ஆந் திகதி குறித்த வேலைகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளதாக பிரதி விவசாயப் பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், உடன்படிக்கையின் 04 ஆம் பிரிவின் பிரகாரம் தாமதக் கட்டணமாக ரூபா 305,900 தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 10 ஆம் இலக்க மதிப்பீட்டு வேலையின் படி கூரைக்காக தென்னை மரம் பயன்படுத்தப்பட்டு ‘‘எஸ்பஸ்டஸ் சீட்’’ இடுவதற்காக ரூபா 135,648 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், பயன்படுத்தப்பட்டிருந்த மரம் தரமற்றமற்றதாகவும் ‘‘எஸ்பஸ்டஸ் சீட்’’ இடும் அளவிற்கு சக்தியற்றதாகவும் இருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஙி) லபுதுவ பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகம் மாகாண குறித்துரைத்த ஏற்பாட்டின் கீழ் 11,900 பொலிசக் உறைகள் மற்றும் மத்திய அரசாங்கத்தின் நிதி ஏற்பாட்டின் கீழ் 48,100 பொலிசக் உறைகளைக் கொள்வனவு செய்வதற்காக 2010 ஆம் ஆண்டில் ரூபா 1,351,800 செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2010 ஆகஸ்ட் 11 ஆந் திகதிய கொள்வனவுச் சபைத் தீர்மானத்தினால் கொள்வனவு செய்யப்பட வேண்டிய அளவு தீர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2013 பெப்ரவரி 12 ஆந் திகதி வரை பகிர்ந்தளிக்கப்படாது களஞ்சியத்தில் ரூபா 272,608 பெறுமதியான 12,170 பொலிசெக் உறைகள் எஞ்சியிருந்தன. இவ்வாறு ஏறத்தாழ 03 ஆண்டுகள் கடந்திருந்தமையால் அவற்றின் தரம் குறைதல் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி, 2010 – 2012 காலப்பகுதி வரை 47,830 பொலிசெக் உறைகள் விவசாயிகளிற்குப் பகிர்ந்தளிப்பதற்காக 54 உத்தியோகத்தர்களிற்கு வழங்கப்பட்டிருந்தன. 2013 பெப்ரவரி 12 ஆந் திகதி வரை விவசாயிகளின் பங்களிப்பாக 28,196 பொலிசெக் உறைகளிற்காக ரூபா 338,352 தொகைக்கு பற்றுச்சீட்டுக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. வழங்கப்பட்டிருந்த பொலிசக் உறைகளிற்காக ரூபா 235,608 தொகை விவசாயிகளின் பங்களிப்பாக 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்டது.

(ஞீ) 2006 முதல் 2011 ஆம் ஆண்டு வரை அநாதையாக்கப்பட்ட மற்றும் ஊனமுற்ற 161 நபர்களிற்கு கமத்தொழில் பயிற்சி மற்றும் சுயதொழில் உதவிகளை வழங்குவதற்காக ரூபா 2,155,416 செலவிடப்பட்டிருந்ததுடன் 2011 ஆம் ஆண்டில் பயிற்சி பெற்றிருந்த 21 நபர்களில் 9 பேர்களை ஈடுபடுத்தி மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையில் அதில் எவரும் பயனுள்ள பயிர்ச் செய்கையினை மேற்கொண்டிருக்கவில்லை. சமூகசேவைகள் உத்தியோகத்தர்கள் செயற்திட்டத்தின் செயன்முன்னேற்றத்தினையும் விளைவுதிறனையும் காணப்படுகின்ற பலவீனங்களையும் சுட்டிக்காட்டியிருந்த போதிலும், அவற்றைக் கருத்திற்கொள்ளாதிருந்தமையே இதற்கான காரணம் என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஞெ) தென் மாகாண சபையின் 2001 இன் 02 ஆம் இலக்க மத வரலாற்று மற்றும் கலை அபிவிருத்தி நடவடிக்கைகளிற்கான கட்டளைச்சட்டத்தில் காட்டப்பட்டுள்ள நோக்கங்களுடன் நேரடியாகத் தொடர்புபடாத நடவடிக்கைகளிற்காக 2012 ஆம் ஆண்டில் 68 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களின் மூலம் ரூபா 2,419,200 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஙே) தென் மாகாண விளையாட்டுக்கள் அமைச்சிற்கு காற்றுச் சீராக்கி இயந்திரத்தைக் கொள்வனவு செய்கையில் தனியார் நிறுவனமொன்றினால் இயந்திரமொன்று ரூபா 220,499 வீதம் 07 இயந்திரங்களிற்காக ரூபா 1,543,493 விலை மனுவொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மற்றொரு நிறுவனம் இயந்திரமொன்று ரூபா 188,000 வீதம் 10 இயந்திரங்களிற்காக ரூபா 1,880,000 விலை மனுவொன்றை சமர்ப்பித்திருந்தது. 07 இயந்திரங்களிற்காக விலை மனுவைச் சமர்ப்பித்திருந்த நிறுவனத்திடமிருந்து இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருக்காமையால் ரூபா 292,491 நட்டம் ஏற்பட்டிருந்தது.

## 4.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கெகனதூர கால்நடைப் பண்ணைக்குச் சொந்தமான 4,200 முட்டைகள் இயளலவுடைய முட்டை வெதுப்பகத்தை உரிய நியமத்தில் தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாமை காரணமாக வீணாகும் முட்டைகளின் அளவு உயர் பெறுமதியைக் கொண்டிருந்தது. அதன் படி, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் முறையே வெதுப்பகத்திற்கு உள்வாங்கப்பட்டிருந்த 32,396 மற்றும் 105,806 முட்டைகளில் 21,606 மற்றும் 66,275 நல்ல குஞ்சுகள் மாத்திரம் பொறித்திருந்தன. அதன் படி இரண்டு ஆண்டிகளிலும் ஏற்றுமதி 34 சதவீதம் மற்றும் 37 சதவீதம் என்பது அவதானிக்கப்பட்டது. அவ்வாறே பொறித்திருந்த கோழிக் குஞ்சுகளை விற்பனை செய்வதற்கு ஒழுங்கு முறையொன்று காணப்படாமையால் பொறிக்கப்பட்ட குஞ்சுகளில் ஓர் அளவினை கிரயமொன்றில் பண்ணையில் வைத்திருக்க வேண்டிய நிலையேற்பட்டிருந்தது. அத்துடன் வெதுப்பகத்தில் வைக்கப்பட்ட முட்டைகளின் பெறுமதியினைப் பெறக்கூடிய விதத்தில் பதிவேடொன்று பண்ணையால் பேணிவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 இன் அரசாங்க கொள்வனவு வழகாட்டல்கள் கோவையின் 5.4.11 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் ஏதேனும் வேலைகள், பொருட்கள் மற்றும் சேவைகள் பெறுமதிசேர் வரியிலிருந்து விடுவிக்கப்படாதிருப்பின் பெறுமதிசேர் வரிக்காக பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர்/ வழங்குனரிடமிருந்து வரி விலைப் பட்டியலொன்றைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் விநியோகிக்கப்பட்ட பொருட்களின் மீது அல்லது செய்யப்பட்ட வேலைகளின் மீது பெறுமதிசேர் வரி செலுத்தப்பட வேண்டிய போதிலும், தெரிவுப் பரிசோதனையில் ரூபா 2,494,695 பெறுமதியான சிட்டைகளிற்காக பெறுமதிசேர் வரி விலைப்பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தென் பஞ்சாங்க கடித உறைகள் மற்றும் நேர அட்டவணைகளை அச்சிடுவதற்காக பிரதான அமைச்சினால் 2012 திசெம்பர் மாதத்தில் ரூபா 3,151,600 செலவிடல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2006 இன் அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 6.3.1 (அ) ஆம் வழிகாட்டலின் பிரகாரம் விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படாததுடன் அக் கோவையின் 6.3.3 (ஆ) ஆம் வழிகாட்டலிற்கு முரணாக விலைமனுக்கள் மூடப்பட்டு 15 நாட்களின் பின்னர் அவை திறக்கப்பட்டிருந்தன.

(ii) கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 2.14.1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் ரூபா 1 மில்லியனுக்கும் ரூபா 2 மில்லியனுக்கும் இடைப்பட்ட பெறுமதிக்காக முன்னர் அறிவிக்கப்பட்ட திகதியில் ஐந்திற்குக் குறையாத நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுதல் வேண்டுமாயினும், 04 நிறுவனங்களிடமிருந்து மாத்திரமே விலைமனுக்கள் கோரப்பட்டிருந்தன.

(ஈ) லபுதுவ பண்ணையினை நடாத்திச்செல்லல்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) லபுதுவ பண்ணை உணவுத் தயாரித்தல் பிரிவின் உற்பத்திக்குத் தேவையான வழங்கல்களைப் பெற்றுக்கொள்வதற்காக 2012 ஆம் ஆண்டில் ரூபா 7,664,986 செலவிடப்பட்டிருந்ததுடன் இவ் வழங்கல்கள் 2 நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்டிருந்தன. 2012 ஆம் ஆண்டிற்காக வழங்குனர்கள் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை. அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 3.3 அல்லது 3.4 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் விலைமனுக்கள் கோரப்பட வேண்டிய போதிலும், வழங்குனர்களைத் தெரிவுசெய்கையில் அவ்வாறு விலைமனுக்கள் கோரப்பட்டிருக்கவில்லை. 2007 யூலை 31 ஆந் திகதிய காணி மற்றும் விவசாய அமைச்சுச் செயலாளரின் கடிதத்தின் படி இரண்டு வழங்குனர் நிறுவனங்களிலிருந்து மாத்திரம் 2007 முதல் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ii) விவசாயப் பயிர்ச்செய்கை, பால் மற்றும் கால்நடை உணவுப் பொதிகள் போன்ற பிரதான சில உற்பத்திப் பிரிவுகள் பண்ணையின் கீழ்

காணப்பட்ட போதிலும், முறையாக பண்ணையின் விளைச்சல்களை பதிவுசெய்தல் நடைமுறையொன்றும் கிரயக் கணக்கீட்டு நடைமுறையொன்றும் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. பண்ணையின் நாளாந்த உற்பத்தி அளவு எவ்வளவு என்பதனையும் ஒவ்வொரு உற்பத்தியினதும் உற்பத்தித்திறனையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக கணக்காய்வின் போது சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

(iii) பண்ணை உற்பத்திகள் மற்றும் உணவுத் தயாரித்தல் பிரிவின் உற்பத்திப் பொருட்களை விலையிடுவதற்கான முறையொன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(iv) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 16,541,078 மூலப்பொருள் இருப்புக்கள் காணப்படுகையில் ரூபா 23,642,436 மூலப்பொருள் இருப்புக்கள் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் ஆண்டின் போது பயன்படுத்தப்பட்டிருந்த மூலப்பொருளின் பெறுமதி ரூபா 13,389,003 ஆகும். ஆண்டின் இறுதியில் இறுதி இருப்பாக ரூபா 26,794,510 காட்டப்பட்டிருந்ததுடன் நுகரப்பட்டிருந்த மூலப்பொருளின் அளவு மொத்த மூலப்பொருளின் அளவில் 33 சதவீதமாக இருந்தது. அதன்படி முறையான முகாமைத்துவமின்றி இருப்புக்கள் கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(v) முன்னைய ஆண்டின் வியாபார, இலாப நட்டக் கணக்கின் படி விற்பனை செய்யப்படாது எஞ்சியிருந்த இருப்பின் பெறுமதி ரூபா 16,171,937 ஆக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டில் அதன் பெறுமதி ரூபா 26,794,510 ஆகும். அதன்படி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் விற்பனை செய்யப்படாதிருந்த இருப்பில் 48 சதவீத வளர்ச்சி காண்பிக்கப்பட்டிருந்தது.

## 4.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்

உள்ளூராட்சித் திணைக்களத்துடன் இணைந்த நிர்மாணப் பொருட்கள் ஆராய்ச்சிக் கூடங்களிற்கு 2012 ஆம் ஆண்டினுள் ஆய்வுகூட உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக 2012 ஆகஸ்ட் 28 ஆந் திகதி மூன்று நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்பட்டிருந்தன. இவ் விலைமனுக்களிடையே இரு நிறுவனத்துடன் இணைந்த நிறுவனமொன்றும் விலை மனுவைச் சமர்ப்பித்திருந்ததுடன் தொழில்நுட்ப

மதிப்பீட்டுச் சபையினால் அந்த இரண்டு நிறுவனங்களினதும் விமைனுக்களிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரையின் மீது 2012 ஒக்தோபர் 03 ஆந் திகதி ரூபா 1,703,744 இற்கு இந்த உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. விலை மனுவைச் சமர்ப்பித்திருந்த இணைந்த நிறுவனம் உபகரணங்களை விற்பனை செய்யாத நிறுவனமாகக் காணப்பட்டதுடன் அது அளவை நடவடிக்கைகளிற்காக சேவை வழங்கும் நிறுவனமென்பது அவதானிக்கப்பட்டது. அதன் படி மேற்படி கொள்வனவிற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுச் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரை தொடர்பில் கணக்காய்வில் திருப்திப்பட முடியவில்லை.

## 4.5 வெளிப்படையான மோசடிகள்

தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையினால் 2.5 மில்லியன் தேயிலைக் கன்றுகளை விநியோகித்தல் தொடர்பில் 2006 யூன் 30 முதல் 2011 சனவரி 24 ஆந் திகதி வரையான காலத்தில் ஒப்பந்தகாரர் ஒருவருடன் ரூபா 30,270,000 ஆன கூட்டுத்தொகைக்கு 22 உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் 2006 யூன் 30 முதல் மே 27 ஆந் திகதி வரையான காலத்தில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் கன்றுகளை வழங்குதல் தொடர்பிலான பரிசோதனையில் பின்வரும் விடயங்கள் வெளிப்பட்டன.

(அ) உடன்படிக்கைகளை கைச்சாத்திடுவதற்கு முன்னர் அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 5.4.8 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் 1 சதவீத செயலாற்றல் பிணைமுறி பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 5.4.4 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் பாதுகாப்புப் பிணையைப் பெற்று ஒப்பந்தத் தொகையில் 20 சதவீதத்திற்கு மேற்படாது முற்பணமொன்று வழங்கப்பட முடியுமாயினும், அவ்வாறு பெற்றுக்கொள்ளப்படாது 17 சந்தர்ப்பங்களில் வழங்குனருக்கு ரூபா 22,638,000 முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது.

(இ) 2006 யூன் 30 முதல் 2007 நவம்பர் 12 ஆந் திகதி வரையான காலத்தினுள் கைச்சாத்திடப்பட்டிருந்த 6 உடன்படிக்கைகளின் படி வழங்கப்பட வேண்டிய 900,000 கன்றுகளை வழங்குவதற்கு 01 முதல் 13 மாதங்கள் வரை தாமதம் செய்யப்பட்டிருக்கையில் மேலும் 1 மில்லியன் கன்றுகளை வழங்குவதற்காக 2008 திசெம்பர் 29 ஆந் திகதி மேலும் 10 உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப்பட்டு ரூபா 9,000,000 முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தது. அந்த உடன்படிக்கைகளின் படி கன்றுகளை வழங்காதிருக்கையில் மேலும் 600,000 கன்றுகளை வழங்குவதற்காக 2011 சனவரி 24 ஆந் திகதி 06 உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப்பட்டு அன்றைய தினம் ரூபா 3,600,000

தொகையும் 2011 சனவரி 26 ஆந் திகதி ரூபா 3,600,000 தொகையும் முற்பணங்களாக செலுத்தப்பட்டிருந்தன.

(ஈ) 2007 மே 30 முதல் 2011 யூலை 27 ஆந் திகதி வரையான காலத்தினுள் 915,700 கன்றுகள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காகச் செலுத்தப்பட வேண்டிய தொகை ரூபா 9,732,374 ஆன போதிலும், முற்பணங்கள் மற்றும் 2006 யூலை 04 முதல் 2011 பெப்ரவரி 15 வரையான காலத்தினுள் கொடுப்பனவுகளாக ஒப்பந்தகாரருக்கு ரூபா 27,766,881 செலுத்தப்பட்டிருந்தது. அதன் படி கணக்காய்வுத் திகதியான 2013 மே 27 ஆந் திகதியில் அதிகாரசபைக்கு ஏற்பட்டிருந்த நேரடி நட்டம் ரூபா 18,034,507 என்பது அவதானிக்கப்பட்டது.

(உ) வெளிவாரி நபர் ஒருவரிடம் ரூபா 18,034,507 தொகை 2 ½ - 4 ½ ஆண்டு காலம் வைக்கப்பட்டிருந்தமையால் அரசாங்கத்திற்கு இழப்பாகியிருந்த வட்டி வருமாணம் அண்ணளவாக ரூபா 5,687,260 ஆகக் காணப்பட்டதுடன் ரூபா 23,721,767 கூட்டுத்தொகையான அப்பணத்திற்கு திணைக்களக் கட்டணமான ரூபா 5,930,442 கூட்டப்படுகையில் ரூபா 29,652,209 தொகை ஒப்பந்தகாரரிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஊ) மேற்குறிப்பிட்ட ரூபா 29,652,209 தொகையில் ரூபா 9,450,000 வழங்குனரால் அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்டிருந்ததுடன் எஞ்சிய ரூபா 20,202,209 தொகை 2013 ஒக்தோபர் 25 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(எ) அதிகாரசபையால் ரூபா 18,034,507 தொகை பாரதூரத் தன்மையினைக் கருத்திற்கொள்ளாது வெளித்தரப்பினருக்குச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அக்கொடுக்கல்வாங்கலிற்கு அதிகாரம் வழங்கியிருந்த, அங்கீகரித்திருந்த மற்றும் சான்றுறுதிப்படுத்தியிருந்த பொறுப்புடைய தரப்பினர்களிற்கு எதிராக 2013 ஒக்தோபர் 25 ஆந் திகதி வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.6 நிதிகளின் குறைப்பயன்படுத்தல்

மத, வரலாற்று மற்றும் கலை அபிவிருத்தி நிதியத்தின் நோக்கங்களை நடைமுறைப்படுத்துவதற்காக பிரதான செயலகத்திலிருந்து கலாச்சார அமைச்சிற்குக் கிடைத்திருந்த ரூபா 2,336,543 தொகை சபையின் அந்தந்த உறுப்பினர்களின்

பிரேரணைகளை செயற்படுத்தாது 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நிதியத்தில் வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4.7 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சுகாதார முறைமையினை பலப்படுத்தும் செயற்திட்டத்திற்காக முன்னைய ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,501,041 பெறுமதியான உபகரண இருப்பு 2013 ஏப்ரல் 12 ஆந் திகதி வரையிலும், 54 வகைகளிற்குரிய இரசாயணப் பொருட்கள், ஆய்வுகூட உபகரணங்கள், 4538 Microscope Slides மற்றும் 09 வகைகளிற்குரிய பல்வேறு வகையான 33 உபகரணங்கள் 2012 நவம்பர் 02 ஆந் திகதி வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டன.

(ஆ) பத்தேகம மாவட்ட வைத்தியசாலைக்கு 61 சத்திரசிகிச்சை உபகரணங்கள் 1988 ஆம் ஆண்டில் கிடைத்திருந்த போதிலும், சத்திரசிகிச்சைக்கூடம் ஆரம்பிக்கப்பட்டிருக்காமையால் கணக்காய்வுப் பரிசோதனைத் திகதியான 2012 நவம்பர் 23 ஆந் திகதி வரை அவ் உபகரணங்கள் விளைவற்றுக் காணப்பட்டன.

(இ) 2005 – 2006 ஆம் ஆண்டுகளில் National HIV/AIDS Prevention Project (NHAQPP) IDA Grand AOH/013 – CE செயற்திட்ட நிதி உதவியின் கீழ் மார்பக சிகிச்சைக் கூடத்தினை நடாத்திச் செல்வதற்காக ஹம்பந்தோட்டை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக வளவில் இரண்டு மாடிக் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2012 யூலை 26 ஆந் திகதி வரை கட்டிடம் குறிப்பிட்ட நோக்கத்திற்காக பயன்படுத்திக் கொள்ளப்படாதிருந்ததுடன் கட்டிடத்தில் பொருத்தப்பட்டிருந்த உபகரணங்கள் வெளி நபர்களால் களத்திச் செல்லப்பட்டிருத்திருந்தன. இக்கட்டிடத்தில் மலேரியா உத்தியோகத்தர் அலுவலகத்தினைத் தாபிப்பதற்கு திட்டமிட்டிருந்ததுடன் களவாடிச் செல்லப்பட்டிருந்த உபகரணங்களை மீளவும் வைத்து திருத்துவதற்காக ரூபா 2,000,000 மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது.

(ஈ) ஹபராதுவ இறங்குதுறை வைத்தியசாலையின் பதிவுசெய்யப்பட்ட மருத்துவ உத்தியோகத்தர் உத்தியோகபூர்வ விடுதியினை ரூபா 593,761 செலவில் திருத்தம் செய்து 2012 ஆகஸ்ட் 15 ஆந் திகதி கடமையிலிருந்த மருத்துவ உத்தியோகத்தரிடம் கையளிக்கப்பட்டிருந்த போதிலும், 2013 ஆகஸ்ட் 26 ஆந்

திகதி வரை அதில் வைத்தியர் ஒருவர் வசித்து வராதிருந்ததுடன் தற்போது அந்த வதிவிடம் அமைந்துள்ள நிலம் காடுவளர்ந்து காணப்பட்டது.

(உ) நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள ஹம்பாந்தோட்டை தரப் பரிசோதனை நிலையத்திற்காக உள்ளூராட்சித் திணைக்களத்தினால் 2011 ஆம் ஆண்டில் ரூபா 110,355 பெறுமதியான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2013 யூன் 04 ஆந் திகதி வரை அந்த உபகரணங்கள் காலி தரப் பரிசோதனை நிலையத்தில் பாதுகாப்பின்றி விளைவற்றதாக வைக்கப்பட்டிருந்தன.

(ஊ) தென் மாகாண கல்வித் திணைக்களத்தின் சனாதிபதி மூலாரம்ப பிரிவு பெயரளவில் தாபிக்கப்பட்டு 1 ½ ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், குறித்துரைத்த அலுவலகம் ஒன்று தாபிக்கப்பட்டிருக்காமை காரணமாக ரூபா 9,438,311 பெறுமதியான கனணிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் 2011 திசெம்பர் முதல் 2013 செப்தெம்பர் 30 வரை விளைவற்றுக் காணப்பட்டன.

(எ) கல்வி அமைச்சின் பத்தலகெதர களஞ்சியத்திலிருந்து 2011 மார்ச் மாதம் காலி பாடசாலை ஒன்றிற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 500,000 பெறுமதியான பியானோ சங்கீத பாடத்தினை கற்பிப்பதற்கு ஆசிரியர் ஒருவர் இல்லாமையால் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஏ) தென் மாகாணத்தினுள் பல்வேறு காரணங்களால் மூடப்பட்டிருந்த பாட்சாலைகள் 21 ஆக காணப்பட்டதுடன் அப்பாடசாலைகளிற்குரிய காணிகள் மற்றும் கட்டிடங்கள் எத்தேவைக்காகவும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஐ) தென் மாகாணத்தினுள் செயற்பட்டிருந்த கிராமியப் பொருளாதார மேம்பாட்டுச் செயற்திட்ட அலுவலகம் நடாத்திச் செல்லப்பட்டிருந்த திட்மிடல் செயலகக் கட்டிடத்தின் சில அறைகளைப் பரிசோதித்ததில் கோவைகள் அலுமாரி, கோவைகள் கெபினற், கோவை இராக்கைகள், கணனி மற்றும் உபபாகங்கள் அடங்கலான 21 வகைகளிற்கு உரித்தான 111 பொருட்கள் பயனுள்ள நடவடிக்கைகளிற்கு பயன்படுத்திக்கொள்ளப்படாது விளைவற்று வைத்திருக்கப்பட்டிருந்தது. இவ்வாறு அலுவலக உபகரணங்கள் விளைவற்றுக் காணப்படுகையிலும் 2012 ஆம் ஆண்டில் ரூபா 169,436 பெறுமதியான அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ஒ) காலி வலயத்திற்குச் சொந்தமான 18 பாடசாலைகளில் ஆசிரியர் இல்லங்கள் மிகவும் பழுதடைந்த நிலையில் காணப்பட்டமை காரணமாக அப்பாடசாலைகளில் எந்தவொரு ஆசிரியரும் வசித்துவராதிருந்தமை அவதானிக்கப்பட்டது. அத்துடன் இந்த ஆசிரியர் இல்லங்களை திருத்துவதற்கு எவ்வித நடவடிக்கையும் தென் மாகாண கல்வித் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஓ) காலி மாவட்டத்தினுள் நிலவுகின்ற ஒரேயொரு விவசாயப் பயிற்சி நிலையமான போத்திவெல மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தின் பிரதான குறிக்கோள் மாவட்டத்தின் விவசாய உத்தியோகத்தர்களிற்கும் விவிசாயிகளிற்கும் பயிற்சிகளை வழங்குவதாகும். இருப்பினும், 2012 ஆம் ஆண்டில் விரிவுரை மண்டபம் 16 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிற்காக 21 நாட்கள் பயன்படுத்திக் கொண்டிருந்ததுடன் விடுதிக் கட்டிடம் 71 பயிலுனர்களால் ஐந்து நாட்கள் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் படி மீளாய்வாண்டினுள் பயிற்சி நிலையத்தின் ஆதனங்களின் பயன்பாடு மிகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

## 4.8 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உறுப்பினர்களின் விடுதியினை வாடகைக்குப் பெறுகையில் அரசாங்க மதிப்பீட்டாளர் ஒரு கட்டிடத்தின் மேல் மாடியினை மாத்திரம் மதிப்பீடு செய்திருந்ததுடன் மொத்தக் கட்டிடத்தினையும் மதிப்பீடு செய்யாது குத்தகையாளர் சமர்ப்பித்திருந்த ரூபா 40,000 மாதாந்த வாடகைக்கு முழுமையான கட்டிடமும் 2012 ஆம் ஆண்டில் வாடகைக்குப் பெறப்பட்டு ரூபா 400,000 தொகை 2012 திசெம்பர் 31 வரை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2011 இல் ரூபா 675,000 காப்புறுத்தப்பட்ட பெறுமதிகொண்ட வாகனம், 2012 மே 03 ஆந் திகதி ரூபா 1,473,950 செலவில் திருத்தப்பட்டிருந்த போதிலும், உரிய தரத்தில் திருத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமைக்கு முறைப்படியான சான்றிதழ் பெறப்பட்டிருக்கவில்லை. 2011 நவம்பர் மாதம் ரூபா 605,023 மேலதிகச் செலவில் திருத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக திசெம்பர் 28 ஆந் திகதி வரை ரூபா 2,078,975 செலவிடப்பட்டிருந்தது.

(இ) மாத்தறை சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தினால் 2011 திசெம்பர் மாதத்தில் ரூபா 2,772,000 இற்கு பேரூந்தொன்று கொள்வனவு செய்யப்பட்டு அதனை நடமாடும் ஆய்வுகூடமாக மாற்றியமைப்பதற்கு 2012 யூலை 10 ஆந் திகதி கராஜிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவ்வேலை பூரணப்படுத்தப்படாது 2013 மே 17 ஆந் திகதி அது மீண்டும் அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அத்துடன் பேரூந்தினை நடமாடும் ஆய்வுகூடமாக மாற்றியமைப்பதற்கு முன்னர் நடமாடும் சேவைக்காக 2011 ஆம் ஆண்டில் ரூபா 1,894,432 பெறுமதியான மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. அதன் படி இந் நடவடிக்கைக்காக ரூபா 4,666,432 செலவிடப்பட்டிருந்த போதிலும், அதன்மூலம் எவ்வித பயனும் 2012 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை கிடைத்திருக்கவில்லை. திட்டமிடலின்றி துரிதமாக கொள்வனவு செய்யப்பட்டிருந்த மருந்து இருப்பினதும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட முடியுமான காலப்பகுதி குறைவடைந்து வந்திருந்தது.

(ஈ) உள்ளூராட்சி திணைக்களத்தினால் 2012 சனவரி 29, 30 மற்றும் பெப்ரவரி 19, 20 போன்ற திகதிகளில் நுவரெலியாவிலுள்ள ஹோட்டேலொன்றில் நடாத்தப்பட்டிருந்த தென் மாகாண, உள்ளூராட்சி நிறுவனங்களின் புதிய மக்கள் பிரதிநிதிகளை அறிவுறுத்தும் பயிற்சிச் செயலமர்விற்காக ரூபா 1,001,575 செலவிடப்பட்டிருந்தது. அரசாங்க செலவின முகாமைத்துவம் தொடர்பான 2007 பெப்ரவரி 28 ஆந் திகதிய சீ.எஸ்.ஏ./பீ1/40 ஆம் இலக்க சனாலதிபதிச் செயலாளரால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் படி அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்கள் தமது கூட்டங்கள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் போன்றவற்றை நடாத்துவதற்காக ஹோட்டேல்களை தேர்ந்தெடுக்கப்படக் கூடாததுடன் உள்நாட்டுச் சுற்றுலாக்களின் போது உணவு பானங்கள் மற்றும் தங்குமிடங்களிற்காக செலுத்தப்பட வேண்டிய ஹோட்டேல் கட்டணங்கள் அரசாங்க நிதியிலிருந்து செலுத்தப்படக் கூடாத போதிலும், அதற்கு முரணாக அச்செலவினம் செய்யப்பட்டிருந்தது.

(உ) எல்பிடிய வலயக் கல்வி அதிகாரப் பிரதேசத்திலுள்ள பாடசாலைகளில் 09 பாடசாலைகளிற்குரிய மாணவர்களின் எண்ணிக்கை 106 ஆக காணப்பட்டதுடன், அப்பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 30 என்பது அவதானிக்கப்பட்டது. இந்த 30 ஆசிரியர்களிற்காக மாகாண சபை நிதியத்திலிருந்து மீளாய்வாண்டின் செப்தெம்பர் வரை ரூபா 5,182,385 சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது. இந்த 09 பாடசாலைகளில் ஒரு பாடசாலையில் எந்தவொரு மாணவரும் கல்வி கற்காதிருந்த போதிலும், 2012

சனவரி முதல் செப்தெம்பர் 30 வரை ரூபா 175,545 தொகை ஆசிரியர் ஒருவரின் சம்பளத்திற்காக செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) பிரதிப் பிரதான செயலாளர் (திட்டமிடல்) அலுவலகத்திற்கு 04 காற்றுச் சீராக்கிகள் வழங்குதல் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலை மனுக்களில் குறைந்த விலை மனுவைச் சமர்ப்பித்திருந்த நிறுவனத்தினைத் தெரிவு செய்யாது நியாயமான காரணங்களைக் காட்டாது இரண்டாவது குறைந்த விலையினைச் சமர்ப்பித்திருந்த நிறுவனத்தினைத் தெரிவுசெய்வதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுச் சபை பரிந்துரை செய்திருந்தமையால் ரூபா 109,625 தொகை மேலதிகமாக செலுத்தவேண்டி ஏற்பட்டிருந்தது.

(எ) தென் மாகாண வறுமை ஒழிப்பு நிதியம்

(i) தென் மாகாண சபையின் 1989 இன் 02 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தினால் தென் மாகாணத்தில் சுய வேலைவாய்ப்புக்களை தோற்றுவித்தல் மற்றும் ஏனைய அபிவிருத்தி நோக்கங்களின் மூலம் வறுமையினை ஒழிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக வறுமை ஒழித்தல் சுழற்சி நிதியம் 1989 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டிருந்தது. 1989 முதல் 1993 வரையான காலத்தினுள் 12178 நபர்களிற்கு ரூபா 57,300,750 கடன் தொகை வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அதன் பின்னர் 1993 இலிருந்து 2013 யூன் வரை அந்த நிதியத்திலிருந்து எவ்விதக் கடனும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 38,029,609 நிலுவைக் கடன் மீதி காணப்பட்டதுடன் கடன் வழங்குவதற்காக தாபிக்கப்பட்டிருந்த 41 கூட்டுறவுச் சங்கங்களில் இது வரை 37 கூட்டுறவுச் சங்கங்களின் பதிவுகள் இரத்துச் செய்யப்பட்டிருந்தன. அச்சங்கங்களினால் 7,712 நலனாளிகளிற்கு வழங்கப்பட்டிருந்த கடன் தொகையில் ரூபா 30,322,937 தொகையும் தற்போது பதிவு இரத்துச் செய்யப்பட்டிருக்காத 04 சங்கங்கள் 1,774 நபர்களிற்கு வழங்கியிருந்த ரூபா 7,655,765 தொகையும் தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டியிருந்தது. கடன் தொகைகள் வழங்கப்பட்டு தற்போது ஏறத்தாழ 21 வருடங்கள் கடந்திருந்த போதிலும், அவற்றை அறவிடுவதற்காக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாமை காரணமாக கடன்களை அறவிட முடியாத நிலைமை காணப்படுகின்றமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(iii) இந்நிதியத்தின் கீழ் கடன் தொகைகளை வழங்குவதற்காக நிதியத்திற்குக் கிடைத்திருந்த ரூபா 73,040,113 தொகை அந்நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படாது நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருக்கையில் 2009 ஆம் ஆண்டில் அத்தொகை பிரதான செயலகத்தினால் மீளவும் பெறப்பட்டு நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. வட்டியுடன் சேர்த்து 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இதன் மீதி ரூபா 95,848,918 ஆகும். 2008 மே 24 ஆந் திகதிய தெமாச/பிசெ/9/9/12 ஆம் இலக்க பிரதான செயலகக் கடிதத்தினால் தென் மாகாண சுழற்சி நிதியத்தின் இந் நிலையான வைப்பினை பயனுள்ள செயற்திட்டமொன்றில் ஈடுபடுத்துவதற்கு பொருத்தமான செயற்திட்ட அறிக்கையொன்றைத் தயாரிக்குமாறு பிரதிப் பிரதான செயலாளர் (திட்டமிடல்) இற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2013 மார்ச் வரை இவ்வறிக்கை தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) அம்லங்கொட சுற்றுலா விடுதியினையும் செய்முறை பயிற்சிப் பாடசாலையையும் நிர்மாணித்தல்

செயற்திட்டமொன்றை தொடங்க முன்னர் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்படாது பணியகத்தினால் ரூபா 994 மில்லியன் மதிப்பீட்டுத் தொகைக்கு இந்நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. சபை நிதியத்திலிருந்து ரூபா 5,329,069 செலவிடப்பட்ட பின்னர் எஞ்சிய நிர்மாண நடவடிக்கைகள் முழுமையாகக் கைவிடப்பட்டிருந்தன. இது தொடர்பில் 2012 ஆகஸ்ட் 15 ஆந் திகதிய 608.5 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தினால் இக்காணியினை முன்னர் காணப்பட்டவாறு அம்லங்கொட நகர சபைக்கு ஒப்படைப்பதற்கும் இது வரை பணியகத்தினால் செலவிடப்பட்டிருந்த ரூபா 5,046,025 தொகையினை நகர சபையிடமிருந்து அறவிடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும், அம்லங்கொட நகர சபையின் 2012 ஒக்தோபர் 10 ஆந் திகதிய அம/நச/02/03/05(1) ஆம் இலக்க கடிதத்தினால் பணியகத்தினால் செலவிடப்பட்டிருந்த ரூபா 5,046,025 தொகை நகர சபையின் இணக்கப்பாட்டின் படி இடம்பெற்ற கொடுக்கல்வாங்கலாக காணப்படாமையால் அத்தொகையினை செலுத்த முடியாது என அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் படி இச்செயற்திட்டத்திற்காகச் செலவிடப்பட்டுள்ள ரூபா 5,329,069 தொகை முழுமையாக பயனற்ற செலவினம் என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

### 4.9 இனங்காணப்பட்ட இழப்புக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 ஆகஸ்ட் முதல் திசெம்பர் வரையான காலத்திற்காக தென் மாகாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் தொழிலாளர்களிற்காக ஊழியர் சேமலாப நிதியினைச் செலுத்துகையில் பூரணப்படுத்த வேண்டிய “C” அறிக்கை பூரணமற்றதாகக் காணப்பட்டமையால் 1 சதவீத மிகை விதிப்பான ரூபா 786 தொகையும் 2007 முதல் 2012 செப்தெம்பர் வரை அதிகாரசபையின் சமயாசமய உத்தியோகத்தர்களிற்காக ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டியிருந்த ரூபா 96,167 நிலுவைத் தொகை மற்றும் உரிய பிரகாரம் உதவு தொகைகள் அனுப்பி வைக்கப்படாமையால் மிகை விதிப்பான ரூபா 44,411 தொகையும் 2012 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ரிதியகம நிவர்தன இல்லத்தில் கோழிப் பண்ணைக்காக 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் கோழி உணவுகளைக் கொள்வனவு செய்கையில் கொள்வனவு நடைமுறைகளைப் பின்பற்றியிருக்காமை காரணமாக ரூபா 938,315 இழப்பு ஏற்பட்டிருந்தது.

### 4.10 ஒப்பந்த நிர்வாகக் குறைபாடுகள்

மாகாண சபையின் பல்வேறு அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்கள் தொடர்பிலான தெரிவுப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வேலையின் பெயர் | அமுல்படுத்திய நிறுவனம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளபடி செலவினம் | அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) கா/படுவன்ஹேன ரத்னசிரி றோயல் மகா வித்தியாலயக் கட்டிடம் | மாகாண கட்டிட பொறியிலாளர் அலுவலகம் | 622,998 | உரிய தரத்தில் இரும்பு கிரீல்கள், கதவுகள் மற்றும் பூட்டுக்கள் பொருத்தப்பட்டிருக்காமை |
| (ஆ) பு/அங்குலகஹ மகா வித்தியாலய 80 x 20 கட்டிடம் | - மேற்படி - | 1,029,506 | நிர்மாணங்கள் வெடிப்புற்று உடைந்திருந்தமை, களன்றிருந்தமை, நிலைகள் கதவுகள் கதவின் சாவிகள் நியமத்தில் காணப்படாமை, மின்சார அழுத்திகள் குறைவாக குறைவாக |

| | | | |
|---|---|---|---|
| | | | பயன்படுத்தியிருந்தமை. |
| (இ) பு/சாராலங்கார மகா வித்தியாலய 90 x 25 கட்டிடத்தின் இரண்டாம் கட்டம் | - மேற்படி - | 372,085 | நிர்மாணங்கள் நியதிகளுடன் இணங்காமை, பூச்சுவேலைகள் உரியவாறு செய்யப்பட்டிருக்காமை, யன்னல்களை மூட முடியாமை, சுவர்களிற்கும் கிரீல்களிற்குமிடையே இடைவெளி காணப்படுதல் |
| (ஈ) பு/படுவன்ஹேன ரத்னசிரி றோயல் மகா வித்தியாலய மூன்று மாடிக் கட்டிடம் | - மேற்படி - | 6,622,998 | தரை ஓடுகள் உரியவாறு பதிக்கப்பட்டிருக்காமை, கிரீல் மற்றும் கதவுகள் 15 A, 13 A, socket outlet உரியவாறு பொருத்தப்பட்டிருக்காமை |
| (உ) நெழுவ கொஸ்முல்ல, தூவிலிஎல்ல வீதி | மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை | 7,180,372 | பெருமளவில் பழுதடைந்து வீதி குன்று குழியாகியிருத்தல் |
| (ஊ) மீகஹஜதுர, இஹலகுமுக்வெவ வீதியை மேம்படுத்தல் | - மேற்படி - | 19,829,257 | எஸ்பொல் கொங்றீட் இடப்பட்ட பகுதி உரிய தடிமனில் காணப்படாமை |
| (எ) பொரால அத்தரவெல வீதி | - மேற்படி - | 20,753,022 | வெட்டியெடுக்கப்பட்ட மாதிரிகளின் படி A B C அளவுகளில் காணப்பட வேண்டிய தடிமன் காணப்படாமை |
| (ஏ) நெழுவ கந்த வீதியை கொங்றீட் செய்தல் | நியாகம பிரதேச செயலகம் | 971,922 | கொங்றீட் இடப்பட்டிருந்த வீதியின் ஏறத்தாழ 10 இடங்கள் வெடித்திருந்தமை மற்றும் கற்கள் களந்திருந்தமை |

**4.11 பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தென் மாகாண கல்வி, காணி மற்றும் காணி அபிவிருத்தி, பெருந்தெருக்கள், தகவல் மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் பதவியணி 11

ஆன போதிலும், சாரதிகள், அலுவலக உதவியாளர், காவலாளர், தொழிலாளர் மற்றும் விடுதிப் பொறுப்பாளர் என்ற வகையில் சேவையாற்றும் நிரந்தர மற்றும் தற்காலிக ஊழியர்களின் மேலதிகம் 12 ஆகும். இவர்களில் 05 ஊழியர்களின் சம்பளங்கள் தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையாலும், இன்னுமொருவரின் சம்பளம் பிரதிச் சுகாதாரப் பணிப்பாளர் அலுவலகத்தினாலும் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த ஊழியர்கள் கடமைகளிற்காக இணைப்புச் செய்யப்பட்டிருந்த இடங்கள் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கல்விச் செயலாளரின் 2003/38 ஆம் இலக்க ஆசிரியர்களின் எண்ணிக்கையினைத் தீர்மானிக்கும் சுற்றறிக்கையின் 2.2.2 ஆம் பந்திக்கு முரணாக அகுரஸ்ஸ கல்வி வலயத்திலுள்ள 43 பாடசாலைகளில் அதிபர் தரத்திலல்லாத ஆசிரியர் சேவையிலுள்ள ஆசிரியர்கள் அதிபர் பதவிக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இருந்த போதிலும், மேலும் 06 பாடசாலைகளில் அதிபருக்கு மேலதிகமாக அதிபர் தரத்திலுள்ள சிலர் சேவையாற்றியிருந்தனர்.

(இ) தங்கல்ல பிரிவின் மூன்று கல்வி அலுவலகங்களில் இரண்டில் பிரிவுக் கல்விப் பணிப்பாளர் வெற்றிடங்கள் நிலவின. அந்த இரண்டு பிரிவுகளினதும் கடமைப் பொறுப்புக்கள் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தமையால் வலயக் கல்விப் பணிப்பாளராக நிறைவேற்றவேண்டிய ஆநேக கடமைப் பொறுப்புக்களை வினைத்திறனாக அவருக்கு மேற்கொள்ள முடியாதிருந்தது.

(ஈ) உடுகம வலயத்தினுள் ஏறத்தாழ 20 பாடசாலைகளில் கணிதம் மற்றும் விஞ்ஞான பாடத்திட்டங்களின் கீழ் உயர் தரத்தில் கல்வி கற்பதற்கு சந்தர்ப்பம் காணப்படாத போதிலும், குறித்த தகைமைகளைக் கொண்ட 37 ஆசிரியர்கள் க.பொ.த (சா.த) மற்றும் ஆரம்பப் பிரிவுகளில் கற்பித்தலில் ஈடுபட்டிருந்ததுடன் அந்த ஆசிரியர்களின் சம்பளமாக ரூபா 6,530,240 தொகை 2012 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்தது.

(உ) காலியிலுள்ள இரண்டு மகா வித்தியாலயங்களில் 04 கணித மற்றும் விஞ்ஞான பட்டதாரி ஆசரியர்கள் 12 மற்றும் 13 ஆந் தரங்களில் அப்பாடங்களைக் கற்பிப்பதாக வலய அலுவலகத் தகவல்களிலிருந்து வெளிப்பட்டிருந்த போதிலும், பாடசாலை தகவல்களின் படி 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் எந்தவொரு மாணவரும் கணித மற்றும் விஞ்ஞான பாட நெறியினை பயின்றிருக்கவில்லை.

(ஊ) தங்கல்ல வலயக் கல்வி அலுவலகம்

(i) மூன்று பாடசாலைகளில் உயர் தர அதிபர் சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் பிரதி மற்றும் உதவி அதிபர் பதவிகளை வகிக்கையில் அதிபர் சேவையில் கீழ் தரத்திலுள்ள உத்தியோகத்தர்களும் ஆசிரியர் சேவையிலுள்ள உத்தியோகத்தர்களும் அதிபர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர்.

(ii) அதிபர் சேவையிலுள்ள 21 உத்தியோகத்தர்கள் ஆரம்ப மற்றும் கனிஷ்ட பாடசாலைகளில் அதிபர்களாக நியமிக்கப்பட்டிருக்கையில் ஆசிரியர் சேவையிலுள்ள 13 உத்தியோகத்தர்கள் தேசிய பாடசாலைகள் மற்றும் மகா வித்தியாலயங்களில் அதிபர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர்.

(iii) வலயத்திற்குரிய 107 பாடசாலைகளில் 60 பாடசாலைகளிற்கு அதிபர்களாக ஆசிரியர் சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்ததுடன் தெரிவுப் பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட 1208 மொத்த மாணவர்கள் கொண்ட பாடசாலையொன்றில் அதிபரைத் தவிர அதிபர் சேவையிலுள்ள மூவர் பிரதி அதிபர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர்.

(iv) தங்கல்ல வலயத்தில் 1991 மே இற்கும் 2012 ஒக்தோபரிற்கும் இடைப்பட்ட காலத்தில் ஆசிரியர் விடுதிகளில் வசிப்பதற்காக வருகை தந்திருந்த 06 ஆசிரியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ஆசிரியர் விடுதிகளிற்கான ரூபா 183,175 வாடகை 2013 யூலை 05 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iv) வலஸ்முல்ல வலயத்தினுள் மேலதிகமாக ஆசிரியர்கள் காணப்படுகின்ற பாடசாலைகளிலிருந்து ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளிற்கு ஆசிரியர்கள் இணைப்புச் செய்யப்படுதலை உரியவாறு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை காரணமாக மனிதவள முகாமைத்துவம் சிறப்பாக மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. விபரம் கழே காட்டப்பட்டுள்ளது.

| விடயப் பரப்பு | வலயத்திலுள்ள பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை எண்ணிக்கை | வலயத்திலுள்ள பாடசாலைகளில் ஆசிரியர் மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|
| ஆரம்ப | 05 | 06 |
| கணிதம் | 01 | 01 |
| வரலாறு | 01 | 02 |
| உடலியற் கல்வி | 02 | 01 |

### 4.12 ஏனைய தரப்பினர்களிற்கு விடுவிக்கப்பட்ட மனித வளம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காலியிலுள்ள மகா வித்தியாலயமொன்றில் சம்பளம் பெறுகின்ற ஐந்து ஆசிரியர்கள் இராணுவச் சேவை, வெளிக்கள விஞ்ஞானகூடம், பலபிடிய ஆங்கிலப் பயிற்சி நிலையம், கணித நிலைய நடவடிக்கைகளிலும் மகாண சபை உறுப்பினரின் பதவியணிக்கும் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் 2012 சனவரி முதல் ஒக்தோபர் வரை ரூபா 1,378,213 மொத்தமான சம்பளம் அதற்காகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) காலி மகா வித்தியாலயமொன்றின் 02 ஆசிரியர்கள் 2008 செப்தெம்பர் முதல் 2012 செப்தெம்பர் 14 வரை காலி வலயக் கல்வி அலுவலகத்திற்கு இணைப்பபுச் செய்யப்பட்டு பாடசாலை சம்பள பதிவேட்டிலிருந்து 2012 செப்தெம்பர் 14 வரை ரூபா 1,582,425 சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

### 4.13 வாகனப் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதான செயலகம் மற்றும் தென் மாகாணத்தின் ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களிடமுள்ள வாகனங்கள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் பிரதான செயலாளரின் பெயரிலுள்ள சகல வாகனங்களையும் உள்ளடக்கிய நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணிவரப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) கணக்காய்வுப் பரிசோதனையில் பிரதான செயலாளரின் பெயரில் ஏறத்தாழ 89 வாகனங்கள் இனங்காணப்பட்டிருந்த போதிலும், நிறுவனத்தின் வாகனப் பதிவேட்டில் 36 வாகனங்கள் மாத்திரமே உள்ளடக்கப்பட்டிருந்தன.

(iii) 1995 ஆம் ஆண்டில் நிதி அமைச்சால் கொள்வனவு செய்யப்பட்டு தென் மாகாண சபையின் உள்ளூராட்சி நிறுவனங்களிற்கு வழங்கப்பட்டிருந்த 36 வாகனங்களின் உரித்தினை பிரதான செயலாளருக்கு பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு 06 மாதங்களிற்கு ஒரு முறையும் வாகனங்களால் நுகரப்படுகின்ற எரிபொருள் அளவு பரிசோதிக்கப்பட வேண்டிய போதிலும், சபைக்குச் சொந்தமான வாகனங்கள் தொடர்பில் கணக்காய்வுத் திகதியான 2013 மார்ச் 12 ஆந் திகதி வரை அப்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) உதவித் தேர்தல் ஆணையாளரின் கடமைகளிற்காக வழங்கப்பட்டிருந்த வாகனம் 2011 திசெம்பர் 02 ஆந் திகதி விபத்துக்குள்ளாகியிருந்ததுடன், அந்த வாகனத்திற்கு முழுமையான காப்புறுதிப் பூட்கை பெறப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட திருத்தச் செலவினத்தை மீள்நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பிரதான அமைச்சின் வாகனத் திருத்தங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையில் 2010 முதல் 2012 ஆம் ஆண்டு வரை 06 வாகனங்களிற்காக ரூபா 9,574,144 செலவிடப்பட்டிருந்ததுடன் அந்த வாகனங்கள் 17 முதல் 25 ஆண்டுகள் பழமையானவையாகும்.

(உ) காலி மாவட்ட சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்த 57 வாகனங்களிற்காக முழுமையான காப்புறுதிப் பாதுகாப்பிற்காக 2012 ஒக்தோபர் 10 ஆந் திகதி ரூபா 1,702,373 செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2012 ஆம் ஆண்டில் விபத்தில் சிக்கியிருந்த 06 வாகனங்களைத் திருத்துவதற்கு 2013 சனவரி 31 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அந்த 06 வாகனங்களில் 5 இற்கு விபத்தினால் ஏற்பட்டிருந்த நட்ட இழப்பு மதிப்பிடப்பட்டிருக்கவில்லை.

**4.14 மேலதிகச் செலுத்துகை**

பின்வரும் மேலதிகச் செலுத்தல்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இரண்டு கொள்வனவுச் சந்தர்ப்பங்களிலும் 07 நிர்மாணச் சந்தர்ப்பங்களிலும் முறையே ரூபா 177,196 மற்றும் ரூபா 1,890,970 தொகை மீளாய்வாண்டில் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஊருகஸ் மன்னாறு அரசாங்க வைத்தியசாலையின் சுகாதாரச் சேவையிலுள்ள பெண் உத்தியோகத்தர் ஒருவர் வருகை தராதிருந்த காலத்திற்காக ரூபா 79,438 சம்பளமாக மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் 2012 ஒக்தோபர் 26 ஆந் திகதி வரை அத்தொகையை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**05. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 கூட்டிணைந்த திட்டம்**

15 நிறுவனங்களால் 2012 ஆம் ஆண்டிற்கான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்**

13 நிறுவனங்களால் 2012 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.3 உள்ளகக் கணக்காய்வு**

08 நிறுவனங்களால் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள்**

2012 ஆம் ஆண்டில் 09 அமைச்சுக்கள்/திணைக்களங்களில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.5 கொள்வனவுத் திட்டம்**

20 நிறுவனங்களால் 2012 ஆம் ஆண்டிற்கான கொள்வனவுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது மாகாண சபையின் பிரதான செயலாளர் மற்றும் உரிய நிறுவனத் தலைவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) சொத்துக்கள் மற்றும் மனிதவள முகாமைத்துவம்

(இ) ஒப்பந்தக் கட்டுப்பாடு

(ஈ) செயற்திட்டங்களை அமுல்படுத்தல்

(உ) பாடசாலை முகாமைத்துவம்

(ஊ) கொள்வனவுக் கட்டுப்பாடு